II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 53 of 2021**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 08.10.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | Gnanam | Age : | |
| Father's / Husband's Name : | | Village : | |
| Taluk : | | Distict : | |

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 2 என் மனைவி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அதில் சொத்து விவரத்தில் நான்கு எல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆன வரைபடம் காட்டுப்பாக்க கிராம நிர்வாக அலுவலகத்தில் உள்ள வரைபடத்தை பார்த்து என்னால் வரையப்பட்டதாகும். எனது வழக்குரையில் பி அட்டவணை சொத்திற்கு வாதி தான் உரிமையாளர் விளம்புகை செய்ய கோரியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கை இழப்பீட்டு பரிகாரம் கோரப்படவில்லை என்றால் சரியல்ல.ஒரு லட்சம் இழப்பீடு கோரியுள்ளேன். திருத்தப்பட்ட வாதுரையில் 5ம் பிரதிவாதியின் பதவியை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்குரை பத்தி 6ல் எந்த அரசியல் நபரின் தூண்டுதல் இருந்தது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு ஒரு நபர் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2ன் அசல் ஆவணம் வங்கியில் உள்ளது அதனை தாக்கல் செய்ய தயாரா இருக்கிறேன். எனது வழக்குரையில் அது வங்கியில் உள்ளது என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். அரசு அதிகாரிகள் பி அட்டவணை

சொத்தில் கால்வாய் தோண்டுவதற்கு வந்தார்கள் என்பதற்கு ஆவணம் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் ஆதாரம் உள்ளது. இதனையும் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், கற்பனையான தனிப்பட்ட விரோதத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியில்ல.

மறுவிசாரணை இல்லை.